Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 57/2022** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW9** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | சந்தானம் |
| Father/Husband Name | : | ராமசாமி |
| Village | : | சத்யா நகர், இராமநாதபுரம் |
| Taluk | : | இராமநாதபுரம் |
| Calling | : | எலக்டிரிசியன் |
| Religion | : | |
| Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.11.2025.

(எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது இராமநாதபுரம் சத்யா நகரில் வசித்து வருகிறேன். எலக்டரிசியனாக வேலை செய்து வருகிறேன். சாட்சி பரமசிவம் மகன் போஸ் என்பவரை தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன சுந்தரம் மற்றும் காயம்பட்ட ராஜேந்திர பிரசாத்தை தெரியும். ஆஜர் எதிரி சிவாவை தெரியும். இறந்துபோன எதிரி ராஜ்கபூரை தெரியும். கடந்த 07.11.2009ம் தேதி காலை 6.00 மணியளவில் நானும் போஸ்–ம் ,இராமநாதபுரம் அப்துல்லா மருத்துவமனைக்கு எதிரில் உள்ள செல்வம்

டீக்கடையில் டீ சாப்பிட போனோம். அப்போது பஜார் காவல்நிலைய ஆய்வாளரும், போலிசாரும் பக்கத்தில் உள்ள பரமக்குடி புரோட்டா கடைக்கு வந்து விசாரணை செய்தார்கள். சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், வரைபடம் தயார் செய்தார்கள். என்னிடமும் போஸிடமும் சாட்சியாக கையெழுத்து கேட்டார்கள். நாங்கள் இருவரும் போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என் கையெழுத்துதான். பார்வை மகசர் **அ.சா.ஆ.1.** மேலும் அந்த இடத்தில் ஒரு டப்பாவில் இரத்தம் படிந்த மண் மற்றும் இரத்தம் படியாத மண்ணை எடுத்தார்கள். அதை ஒரு பேப்பரில் எழுதி எங்கள் இருவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என் கையெழுத்துதான். அத்தாட்சி **அ.சா.ஆ.2**. பின்னர் என்னை விசாரித்துவிட்டு போக சொன்னார்கள். பின்பு அன்று மதியம் 2.00 மணியளவில் அல்லிக்கண்மாய் சுடுகாடு ரோடு வழியாக பிள்ளையார் கோவில் அருகில் நான், போஸ் மற்றும் 2,3 நபர்கள் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது பஜார் காவல்நிலைய ஆய்வாளர் அங்கு வந்தார். நாங்களும் அந்த பகுதிக்கு போய் கொண்டிருந்தோம். சுடுகாட்டில் காரியம் செய்யும் இடத்தில் வைத்து ராஜ்கபூர் என்பவரை ஆய்வாளர் கைது செய்தார். அப்போது எதிரி எங்கள் முன்பு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள நானும் போஸ்–ம் கையெழுத்து போட்டோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மறைத்து வைத்திருக்கப்பட்ட ஆட்டோவையும், ரீப்பர் கட்டையையும் என்னுடன் வந்தால் எடுத்து தருவதாக சொன்னார். மஞ்சள் கலர் ஆட்டோவை காண்பித்தார். ஆட்டோவின் பின் பகுதியில் மறைத்து வைத்திருக்கும் 3 அடி நீளமுள்ள ரீப்பர் கட்டையை இரத்தம் படிந்ததோடு எடுத்து கொடுத்தார். அதை ஆய்வாளர் எங்கள் முன்பு அத்தாட்சி மூலம் கைப்பற்றினார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ. 3**. அத்தாட்சி **அ.சா.ஆ.4.** என்னால் போலிசார் கைப்பற்றிய ரீப்பர் கட்டையை அடையாளம் காட்டமுடியும் . என்னிடம் காட்டப்படும் ரீப்பர் கட்டையின் உடைந்த இரண்டு பாகங்கள் தான் எதிரியிடமிருந்து காவல் ஆய்வாளர் கைப்பற்றினார். 17.11.2009 ம் தேதி மதியம்

2.00 மணியளவில் பஜார் காவல் நிலையத்திலிருந்து எனக்கு போன் வந்தது. இந்த வழக்கின் ஆஜர் எதிரியான சிவா என்பவரை கைது செய்து வைத்திருப்பதாகவும், அவரிடம் விசாரிக்க வேண்டி இருப்பதால் என்னை அழைத்தார்கள். நானும் போஸ் என்பவரும் அங்கு சென்றோம். ஆஜர் எதிரிதான் சிவா ஆவார். அப்போது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் ஆய்வாளர் எங்கள் முன்பு கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்தார். அதில் நானும் போஸ் என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இராமநாதபுரம் பாரதிநகர் தங்கமகால் எதிர்புறம் ஆட்டோவை மறைத்து வைத்திருப்பதாகவும், அங்கு வந்தால் அந்த ஆட்டோவை காண்பிப்பேன் என்றும் அதில் மறைத்து வைத்திருந்த ரீப்பர் கட்டையை அடையாளம் காண்பிப்பேன் என்று அழைத்து சென்றார். நாங்கள் அந்த இடத்திற்கு சென்றோம். அங்கு ஆய்வாளர் எதிரி மறைத்து வைத்திருந்த ஆட்டோவை காண்பித்தார். அதை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அதில் எதிரி மறைத்து வைத்திருந்த ஒன்றரை அடி நீளமுள்ள ரீப்பர் கட்டையை எடுத்து ஆஜர் செய்தார். ஆய்வாளர் அத்தாட்சி மூலம் அவற்றை கைப்பற்றினார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட **அ.சா.ஆ.5**. அத்தாட்சி **அ.சா.ஆ.6**. ஒன்றரை அடி நீளமுள்ள ரீப்பர் கட்டை அ.சா.பொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் ஆஜர் படுத்திய ஆட்டோ 4 புகைப்படங்களுடன் உள்ளது. அந்த புகைப்படங்கள் **அ.சா.ஆ.7**. மற்றும் குறுந்தகடு **அ.சா.ஆ.8.** இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. எலக்ட்ரிசியனா எத்தனை வருடங்கள் வேலை செய்து வருகிறேன் என்றால் சிறுவயது முதல். எந்த ஊருக்கு வேலைக்கு கூப்பிட்டாலும் செல்வேன் என்றால் சரிதான் இறந்துபோன சுந்தரமும் காயம்பட்ட ராஜேந்திர பிரசாத்தும் என்ன உறவு என்றால் பழக்க வழக்கம். செல்வம் பேக்கரி டீக்கடையில் நாங்கள் நின்று கொண்டிருந்தபோது போலிசார் எந்த திசையில் இருந்து எத்தனை பேர் வந்தார்கள் என்றால் ஆய்வாளர் 6,7 போலிசாருடன்

வண்டிக்கார தெரு சந்திலிருந்து வந்தார்கள். வந்தவுடன் என்னை இந்த வழக்கில் சாட்சியாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள் என்றால் சரிதான். அதோடு காவல்நிலையத்திற்கு வந்து கையெழுத்து போடுங்கள் என்று சொன்னார்கள் என்றால் இல்லை. அதே இடத்தில் வரைபடத்தில் கையெழுத்து போட சொன்னார்கள், போட்டோம். நான் காவல் நிலையத்தில் வைத்து எந்த கையெழுத்தும் போடவில்லை இரத்தம் படிந்த மண், படாத மண் ஆகியவற்றை காவல்நிலையத்தில் வைத்திருந்தபோது தான் கையெழுத்து கேட்டார்கள் என்றால் சரியல்ல. எந்த கலர் டப்பாவில் இரத்தம் படிந்த மண், படாத மண்ணை சேகரித்தார்கள் என்றால் கண்ணாடி டப்பாவில். நான் சொல்வதுபோல் கண்ணாடி டப்பாவில் போலிசார் இரத்தம் படிந்த மண், படாத மண் என் முன்னிலையில் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. போலிசார் சம்பவ இடத்தில் வைத்து இரத்தம் படிந்த மண், படாத மண், வரைபடத்தை தயார் செய்தபோது 1வது எதிரி ராஜ்கபூரை அல்லிக்கண்மாயில் பிடித்து வைத்திருந்தார்கள். போலிசார் போகும்போது நாங்கள் பின்னால் சென்றோம். நாங்கள் செல்வதற்குள் போலிசார் 1ம் எதிரி ராஜ்கபூரை பிடித்து வைத்திருந்தார்கள். 1ம் எதிரி ராஜ் கபூரை ஆய்வாளரிடம் ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலத்தை ஒரு காவலர் எழுதினார். அவர் பெயர் தெரியாது. அதில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் என்னிடம் படித்து காண்பித்தார்கள். கையில்தான் எழுதினார்கள். எத்தனை விதமான பேனாவில் எழுதினார்கள் என்றால் கார்பன் வைத்து ஒரே பேனாவில்தான் எழுதினார்கள். அதன்பிறகு காவல்நிலையத்திற்கு வந்து கையெழுத்து போடும்படி சொன்னார்கள் என்றால் இல்லை. நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ய எவ்வளவு நேரம் ஆனது என்றால் ஒரு மணி நேரம். நாங்கள் எங்கள் பைக்கிலும், போலிசார் அவர்களது ஜீப்பிலும் வந்தார்கள். அல்லிக்குளம் கண்மாய் கரையிலிருந்து பைக்கில் சென்றால் இரண்டு நிமிடத்தில் செல்லக்கூடிய தூரத்தில் 1ம் எதிரியின் வீடு உள்ளது. போலிசார் தான் என்னிடம் கட்டை, ஆட்டோவை காண்பித்தார்கள் என்றால் 1ம் எதிரி ராஜ்கபூரே எடுத்து காண்பித்தார்.

எடுத்துக்காட்டப்பட்ட கட்டையில் இரத்தம் படிந்திருந்ததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த கட்டை உடைந்திருந்தது. நீதிமன்றத்தில் உள்ள கட்டையில் இரத்தம் இல்லை என்றால் சரிதான். மதியம் 2.00 மணியளவில் காவல் ஆய்வாளர் போன்மூலம் எனக்கு தகவல் கூறி காவல்நிலையத்திற்கு வரசொன்னார். எந்த போனில் இருந்து வந்தது என போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நானும் போஸ்–ம் மதியம் 2.00 மணியளவில் பஜார் காவல்நிலையத்திற்கு சென்றோம். நாங்கள் காவல்நிலையத்திற்கு சென்றபோது எதிரி சிவாவை கைது செய்து காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். அவரை விசாரித்தபோது ஒரு ஒப்புதல் வாக்குமூலம் ஆய்வாளரிடம் கொடுத்தார். அதை ஒரு காவலர் எழுதினார். இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ராஜ்கபூர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதிய அதே காவலர்தான் எழுதினாரா என்றால் இல்லை. 2ம் எதிரி சிவா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் ஒரே பேனாவால் கார்பன் வைத்து ஒரே காவலர்தான் எழுதினார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம்தான் சிவா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலமா என்றால் எனக்கு படிக்க தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தின் முதல் 2 பக்கங்கள் ஒரு பேனாவிலும் அடுத்த ஒரு பக்கம் வேறு பேனாவிலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் இரண்டு பக்கங்களில் உள்ள கையெழுத்து ஒன்றாகவும், அடுத்த ஒரு பக்கத்தில் எழுதப்பட்டுள்ள கையெழுத்து வேறு நபரால் எழுதப்பட்டுள்ளதுபோல் உள்ளது என்றால் சரிதான். என் முன்னிலையில் ராஜ்கபூரோ, சிவாவோ ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் அவ்வாறு கொடுத்திருந்தால் நான் மாற்றி மாற்றி சொல்லியிருக்கமாட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் வைத்து ஏற்கனவே தயாரித்து வைக்கப்பட்டிருந்து அத்தாட்சியில்தான் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. அந்த அத்தாட்சி அடித்தல் திறுத்தல் இல்லாமல் எழுதப்பட்டிருந்தது என்றால் ஞாபகமில்லை. சிவா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ய ஒரு மணி நேரம் ஆனது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் அடித்தல் திறுத்தல் உள்ளது என்றால் எனக்கு படிக்க தெரியாது. 2ம் எதிரி சிவா கொடுத்த ஒப்பபுதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பாரதிநகர் தங்கமகால் முன்பு கூட்டி

சென்று ரீப்பர் கட்டையை அவர் எடுத்து கொடுத்தார். மஞ்சள் கலர் ஆட்டோ தங்கமகால் முன்பு நின்றுகொண்டிருந்தது . அதையும் காட்டினார். அங்கு வைத்து தயாரிக்கப்பட்ட அத்தாட்சியை காவல்நிலையத்தில் வைத்துதான் கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல. 2ம் எதிரி சிவா கைது செய்து காவல்நிலையத்தில் வைத்திருக்கப்படவில்லை என்றும் அவர் இந்த வழக்கு சம்பந்தமாக தன்னை போலிசார் தேடிவருவது தெரிந்து வழக்கறிஞர் ஜோதிமுருகன் மூலமாக இராமேஸ்வரம் நடுவர் நீதிமன்றத்தில் சரண்டர் ஆனார் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில், நேரத்தில், தேதியில் எந்த எதிரிகளும் கைது செய்யப்படவில்லை என்றும், ஒப்புதல் வாக்குமூலமும் அத்தாட்சி தயார் செய்யவில்லை, எந்த விதமான சான்று ஆவணமும் கைப்பற்றப்படவில்லை என்றும் போலிசார் தயவு தேவைப்படும் என்பதால் போலிசார் போன் போட்டு அழைத்ததாகவும், சென்றதகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.